திரு. டி. ஆர். கஜபதி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 படுக்கைகள் கொண்டதாக மாற்றித் தருவதாக உறுதி அளித்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுதி இல்லை. பரிசீலனையில் இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

தொழிற் பயிற்சி மாணவர்களுக்குத் தமிழில் கேள்வித்தாள்.

*2127. திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களுக்குத் தமிழில் கேள்வித்தாள் கொடுக்கும் உத்தேசம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது புதுடில்லி வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி தலைமை இயக்குநரின் ஆளுகைக்கு உட்பட்ட பொருளான தால் மாநில இயக்குநர் இது குறித்து கடிதத் தொடர்பு கொண்டுள்ளார்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ-ல் படிக்கக்கூடிய மாணவர்கள் கேள்வித் தாள்களைத் தமிழில் கொடுத்தால் ஏதுவாக இருக்கும் என்றுதான் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே கோவையிலும், தமிழகம் முழுவதிலும் கேள்வித் தாள்களைத் தமிழில் கொடுக்க அரசு முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டத்துடன் தமிழகத்தில் இருக்கிற ஐ.டி.ஐ. இணைக்கப்பட்டுள்ளதால் புதுடில்லியில் கேள்வித்தாள்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு அங்கே இருந்துதான் அவை வருகின்றன. மற்ற எல்லா பாடங்களுக்கும் ஆங்கிலத்திலும் அதே நேரத்தில் சமூகப் பாடத்திற்கு

1990 சனவரி 20]

மட்டும் தமிழிலே இன்றைக்குத் தயாரித்துக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அதனுடைய இரகசியத்தைப் பாது காக்க முடியாத காரணத்தால்தான் அங்கே இருந்து வரப்பட்ட அன்றைய தினமே அந்தக் கேள்வித் தாள்களைக் கரும்பலகை யில் தமிழிலே மாற்றி எழுதி அவர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியிலே எழுதலாம் என்று கூறப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சிக் கல்வி பெற மாண வர்கள் மிக அதிகமாக விரும்புகிற காரணத்தால் அரசு பயிற்சிப் பள்ளிகளில் உடனடியாக ஷிப்ட் முறையினைக் கொண்டு வரு வதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துரு ஏதும் இதுவரையில் இல்லை. உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆலோசிக்கப் படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு பரிட்சைக்கு அனுப்பும்படியான கேள்வித்தாள்களை அவர்கள் தெரிந்த மொழியில் கொடுக்க முடியவில்லை என்றால், அப்படிக் கொடுக்காமல் இருப்பதே உண்மையிலேயே சட்ட விரோதம் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள் வார்களா? இதற்கு இந்த அரசுதான் பொறுப்பு என்று உட னடியாகச் சொல்ல நான் வரவில்லை. டெல்லியில் தயாரிக் கப்படுகிற அந்தக் கேள்வித்தாள்களை தமிழகத்திற்கும் மற்றும் மற்ற மொழிகள் பேசக்கூடிய மாநிலங்களுக்கும் உரிய வகையில் மாற்றி அனுப்பக்கூடிய வகையில் அவர்களே அச்சிட்டு அனுப்ப வேண்டும் ரகசியத்தைக் காப்பாற்றிக் கொண்டே என்று நமது அரசு வற்புறுத்தி அந்த வகையில் அதனைப் பெறுவதற்கு முயற்சி எடுக்குமா என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே உள்ளவர்களிடம் கடிதத் தொடர்பு கொண்டுள்ளோம். முடிவு வந்தவுடன் தெரிவிக்கப் படும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அதிகம் பேர் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியும் என்று அறிகிறேன். அதைப் போக்கு வதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.